**மளிகை பொருட்கள் விரைவான வினியோகத்திற்கு**
**கோவையில் முதல் 'நிறைவேற்று மையத்தை' துவக்கிய பிளிப்கார்ட்**

- 1.2 லட்சம் சதுர அடியில் துவக்கப்பட்டுள்ள இம்மையம் 90 சதவீத பெண் பணியாளர்களுடன் 1200 பேரைக் கொண்டு செயல்பட உள்ளது
- நகரங்களில் உள்ள வாடிக்கையாளர்களின் மளிகை பொருட்களுக்கான தேவையை பூர்த்தி செய்யும் அதேவேளையில் விற்பனையாளர்களையும் ஆதரிக்கும் வகையில் இந்த மையம் துவக்கப்பட்டுள்ளது

கோவை, ஜூலை 1-
கோவை மற்றும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகளில் உள்ள வாடிக்கையாளர்கள் ஆன்லைனில் அதிக அளவிலான மளிகை பொருட்களை ஆர்டர் செய்து வருகிறார்கள். இதன் காரணமாக அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக இந்தியாவின் உள்நாட்டு மின்னணு வணிக சந்தை நிறுவனமான பிளிப்கார்ட் மளிகை பொருட்கள் வினியோகத்தில் சிறப்பான சேவை அளிக்க கோவையில் தனது முதல் 'நிறைவேற்று மையத்தை' திறந்துள்ளது. தென் இந்தியாவில் இந்த நிறைவேற்று மையத்தை திறப்பதன் மூலம் தனது வினியோக செயல்பாடுகளை பிளிப்கார்ட் மேலும் மேம்படுத்த உள்ளது. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாவதோடு, தொழில் முனைவோருக்கும் ஏராளமான வாய்ப்புகள் கிடைக்கும்.
1.2 லட்சம் சதுர அடி கொண்ட இந்த மையத்தில் உள்ளூர் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் விதமாக நேரடியாக 1200 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. பிளிப் கார்ட்டின் முக்கிய நிறைவேற்று மையமாக செயல்பட இருக்கும் இந்த மையம் மொத்த ஊழியர்களில் 90 சதவீத பெண் ஊழியர்களை கொண்டு செயல்பட உள்ளது. துவக்கத்தில் இங்கு 500 பேர் பணியமர்த்தப்படுகிறார்கள். பிளிப்கார்ட் அதன் விவிதா என்னும் சமூக மேம்பாட்டு திட்டத்தில் பெண்களுக்கு ஆதரவளிக்கும் பணியிடக் கொள்கைகளையும் அவர்களின் தொழில் முன்னேற்றத்திற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இங்கு அதிக பெண் ஊழியர்களை பணியமர்த்த இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இங்கு பணியாற்றும் ஊழியர்கள் உற்சாகத்துடன் பணியாற்றும் வகையில் அவர்களின் குழந்தைகளுக்கான பாதுகாப்பு மையம், அவர்களுக்கான போக்குவரத்து வசதி மற்றும் உணவு ஆகியவையும் இங்கு வழங்கப்பட உள்ளது.
இந்த புதிய நிறைவேற்று மையம் முதல் முறையாக ஆன்லைனில் பொருட்களை ஆர்டர் செய்யும் நுகர்வோர் உட்பட லட்சக்கணக்கான நுகர்வோரின் தேவைகளை பூர்த்தி செய்யும். இதன் இணையதளத்தில் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு தெரிந்த மொழிகளில் பொருட்களை ஆர்டர் செய்ய பல்வேறு பிராந்திய மொழிகளை பிளிப்கார்ட் அறிமுகம் செய்துள்ளது. பிளிப்கார்ட்டில் உள்ள வாடிக்கையாளர்களில் 52 சதவீதம் பேர் 2-ம் கட்ட நகரங்களைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இது மின்னணு வணிக வளர்ச்சிக்கான சிறந்த சான்றாகும்.
சென்னையில் ஏற்கனவே நிறைவேற்று மையத்தை திறந்துள்ள பிளிப்கார்ட் தற்போது கோவையில் 2வது மையத்தை திறந்துள்ளது. தென்னிந்தியாவைப் பொறுத்தவரை இது 9வது மையம் ஆகும். பிளிப்கார்ட்டின் இந்த மளிகை பொருள் வியாபாரமானது உள்ளூர் உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு ஒரு ஊக்கத்தை அளிப்பதோடு, விவசாயத்திற்கும், சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கிறது.

இது குறித்து தமிழக அரசின் தகவல் தொழில்நுட்ப முதன்மை செயலாளர் நீரஜ் மிட்டல் கூறுகையில், கோயம்புத்தூரில் பிளிப்கார்ட் துவக்கி உள்ள இந்த மையம் உள்ளூர் சுற்றுச்சூழல் அமைப்பிற்கான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, ஊழியர்களையும் டிஜிட்டல் முறைக்கு மேம்படுத்துகிறது. வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான வணிகங்களுக்கு தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத்துறை தொடர்ந்து ஆதரவை வழங்குவதோடு அதன் வளர்ச்சிக்கு உகந்த கொள்கைகளையும் உருவாக்கும் என்று தெரிவித்தார்.

பிளிப்கார்ட் என்பது மக்களை மையமாகக் கொண்ட ஒரு நிறுவனம் ஆகும். இது அதன் வினியோகச் சங்கிலி மூலம் பன்முகத்தன்மையை அதிகரிக்கச் செய்கிறது. நாடு முழுவதும் உள்ள பல பெரிய கிடங்குகளில் முழுக்க முழுக்க பெண்களே பணியாற்றுகிறார்கள். சென்னையில் உள்ள இந்நிறுவனத்தின் வரிசைப்படுத்தல் மையத்தில் பணியாற்றும் பெண்கள் லட்சக்கணக்கான ஏற்றுமதிகளை கவனித்து வருகிறார்கள். மேலும் அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு தங்கு தடையில்லாத பொருட்கள் வினியோகத்தையும் சிறப்பாக வழங்கி வருகிறார்கள்.

இந்த புதிய நிறைவேற்று மையம் குறித்து பிளிப்கார்ட் நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவரும் கார்ப்பரேட் விவகாரங்கள் தலைமை அதிகாரியுமான ரஜ்னீஷ் குமார் கூறுகையில், மளிகை பொருள் விற்பனையானது மின்னணு வணிகத்தில் வேகமாக வளர்ந்து வருகிறது. உள்நாட்டு மின்னணு வணிக சந்தையைப் பொறுத்தவரை வாடிக்கையாளர்களின் அத்தியாவசிய தேவைகளை அவர்களின் வீட்டு வாசலுக்கே பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான முறையில் கொண்டு சென்று சேர்ப்பதில் நாங்கள் முன்னிலையில் உள்ளோம். கோயம்புத்தூர் ஒரு சிறந்த பொருளாதார மையமாக இருக்கும் அதே சமயத்தில் இந்த மையத்தை நாங்கள் இங்கு திறப்பதன் மூலம் இதனைச் சுற்றி உள்ள பகுதிகளுக்கு எங்களால் விரைந்து சேவையாற்ற முடியும். இங்கு எங்களின் மளிகை பொருட்களுக்கான நிறைவேற்று மையத்தை திறப்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். நுகர்வோருக்கு அத்தியாவசியமான பொருட்களை மிகவும் பாதுகாப்பாக வழங்க வேண்டும், அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்ற மாநில அரசின் கொள்கைகள் காரணமாக நாங்கள் இந்த மையத்தை இங்கு திறப்பது எங்களுக்கு சாத்தியமாகிறது. இந்த மையம் உணவு பதப்படுத்தும் துறையை ஊக்கப்படுத்துவதோடு கூடுதலாக மாநிலத்தில் உள்ள சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளின் பொருளாதாரத்தையும் கணிசமாக உயர்த்தும் என்று தெரிவித்தார்.

இது குறித்து பிளிப்கார்ட் மளிகை பிரிவு துணைத் தலைவர் ஸ்மிருதி ரவிச்சந்திரன் கூறுகையில், தொற்று நோய் காரணமாக வாடிக்கையாளர்கள் மின்னணு வணிகத்தை நோக்கி வரத்துவங்கி உள்ளனர். இதன் காரணமாக இந்த துறை அதிவேக வளர்ச்சி அடைந்து வருகிறது. உள்நாட்டு மின்னணு வணிக சந்தையாக, ஆன்லைன் வர்த்தகத்தின் வசதியை நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களின் வீட்டு வாசலுக்கே கொண்டு சென்று சேர்ப்பதில் பிளிப்கார்ட் முக்கிய பங்காற்றுகிறது. இதில் 2-ம் கட்ட நகரங்கள் முன்னிலை வகிக்கின்றன. அடுத்த சில வாரங்களில் கோவையில் எங்கள் மளிகை பொருள் சேவையை நாங்கள் துவங்க இருக்கிறோம். எங்களின் முதல் நிறைவேற்று மையத்தை இங்கு திறப்பதன் மூலம் இந்த பகுதியில் உள்ள வாடிக்கையாளர்களின் அத்தியாவசிய தேவைகளை பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான முறையில் எங்களால் பூர்த்தி செய்ய முடியும். வர்த்தக கூட்டு

நிறுவனங்களுடன் நாங்கள் இணைந்து நுகர்வோருக்கு அத்தியாவசிய பொருட்கள் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்கிறோம் என்று தெரிவித்தார்.

**தமிழகத்தில் பிளிப்காரட் முதலீடு**:

- பிளிப்கார்ட் தமிழகத்தில் 8 நிறைவேற்று மையங்களைக் கொண்டுள்ளது. இதன் மொத்த பரப்பளவு 1.5 மில்லியன் சதுர அடி ஆகும். இது தமிழகத்தில் சுமார் 150 டெலிவரி மையங்களைக் கொண்டுள்ளது
- தமிழகத்தில் 52 ஆயிரம் நேரடி வேலை வாய்ப்புகளை உருவாக்கி உள்ளது
- சிறப்பான மின்னணு வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள சென்னையில் அதிநவீன தரவு மையத்தையும் பிளிப்கார்ட் கொண்டுள்ளது

கடந்த சில ஆண்டுகளில், நாடு முழுவதும் மின்னணு வணிகம் மிக வேகமாக வளர்ந்து வரும் பிராந்தியங்களில் தென் பிராந்தியமும் ஒன்றாக உருவெடுத்துள்ளது, மின்னணு வணிகத்தில் லட்சக்கணக்கான புதிய வாடிக்கையாளர்கள் தங்களுக்கான தேவைகளையும், விற்பனையாளர்கள் மற்றும் மளிகை கடை உரிமையாளர்கள் தங்களுக்கான தொழில்முனைவோர் வாய்ப்புகளையும் பயன்படுத்தி வருகிறார்கள். இந்த மாற்றத்தை கொண்டு வருவதிலும் இந்த பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் பிளிப்கார்ட் உறுதுணையாக இருந்து வருகிறது. பிளிப்கார்ட் செயலி தற்போது தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் உட்பட 11 இந்திய மொழிகளிலும் கிடைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.